[2nd March 1968

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைக்குள் இருக்கின்ற மாவட்டக் கழக கட்டிடங்கள் அந்தந்த ஒன்றியங் களின் வசம் அவைகளின் உபயோகத்திற்காக மாற்றப்பட்டு உள்ளன. இதர பொது கட்டிடங்கள் அரசாங்கத்தின் பல்வேறு உபயோகத்தில் உள்ளன. சம்பந்தப்பட்ட இலாக்காக்களுடன் தொடர்பு கொண்டு மாவட்ட அதிகாரிகள் தேவையுள்ள இலாக்காவுக்கு இட வசதி அளிக்கிறார்கள்.

(இ) ஊராட்சி ஒன்றியங்களுக்கு உபயோகமுள்ள மாவட்ட கழக ஆவணங்கள் அந்தந்த பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்பட் டுள்ளன. இதர பொது ஆவணங்கள் மாவட்ட அதிகாரியின் பொறுப்பில் உள்ளது. பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு மாற்றப்படாத இதர மாவட்டக் கழக பொதுச் சொத்துக்கள் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு அவை களின் மதிப்பீட்டை மாவட்டக் கழகத்தின் இருப்போடு கணக்கு வைக்கப் டுள்ளது.

(உ) மாவட்டக் கழகத்திற்குச் சொந்தமான ரெயில்வே செஸ் நிதி பெரும்பாலும் அரசாங்க கடன் பத்திரங்களாக இருக்கின்றன. இந்த நிதியின் முதல் பொறுப்பு பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஆரம்பப் பள்ளிகள் கட்டு வதற்காகவும், அடுத்தபடி தாய்-சேய் நல விடுதிகளும், மருத்துவ மனை களும் கட்டுவதற்காகவும் பயன்படுத்தப்படவேண்டும். இந்த நிதியை மேற் கூறிய காரியங்களுக்குப் பயன்படுத்த மாவட்ட அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(எ)—	ரூபாய் (லட்சத்தில்.)
திருநெல்வேலி பழைய மாவட்டக் கழகம்	6·92
திருச்சிராப்பள்ளி மாவட்டக் கழகம்	1·16
இராமநாதபுரம் மாவட்டக் கழகம்	1·59
சேலம் மாவட்டக் கழகம்	30·50
தஞ்சாவூர் மாவட்டக் கழகம்	123·00
கோயம்புத்தூர் மாவட்டக் கழகம்	27·92
தென் ஆற்காடு மாவட்டக் கழகம்	8·44
மதுரை மாவட்டக் கழகம்	6·72

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, தஞ்சை ஜில்லா, நெல்லை ஜில்லா. ரெயில்வே சம்பந்தமாக மத்திய சர்க்கார் கொடுப்பதாக இருந்தால், கோடிக்கணக்கான ரூபாய்கள், கொடுத்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும், பஞ்சாயத்துக்களுக்காகக் கொடுத்ததாக தெரிய வில்லை. சர்க்கார் பத்திரங்களாக இருந்தாலும் அதற்கு மதிப்புகொடுத்து அந்தப் பணத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் உத்தரவு போடுமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : ஒவ்வொரு மாவட்டக் கழகம் மூலமாக கிடைத்த தொகையின் விவரம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூபாயை வைத்துக் கொண்டு மாவட்டக் கடன் தொகையை ஈடு செய்ய அரசு உத்தேசித்திருக்கிறது. அந்த மாவட்டக் கழக வளர்ச்சித் திட்டங்களுக்கு மாவட்ட வளர்ச்சி மன்றங்களும் அரசாங்கத்தின் சிபாரிசு படி பயன்படுகின்றன. இதற்கான விதிமுறைகள்படி நடைபெறுததால் சில மாவட்ட மன்றங்களில் இந்த தொகை பயன்படுத்தப்படாமல் இருந்து வருகிறது.

Kodaikanal Township Committee

***159 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—**

(*a*) the development works executed after the Kodaikanal Municipality, Madurai district, has been converted into a Township Committee ;

2nd March 1968]

(*b*) the annual income of the Kodaikanal Township Committee;

(*c*) the annual expenditure ; and

(*d*) the financial assistance extended by the Government of Madras so far ?

கொடைக்கானல் டவுன்ஷிப் கமிட்டி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள, கொடைக்கானல் நகராட்சியை டவுன் ஷிப் கமிட்டியாக ஆக்கிய பிறகு நடந்துள்ள அபிவிருத்தி வேலைகள் என்ன ?

(இ) கொடைக்கானல் டவுன்ஷிப் கமிட்டிக்கு வருட வருமானம் எவ் வளவு ?

(உ) செலவு எவ்வளவு ?

(எ) சென்னை சர்க்கார் இதுவரை கொடுத்த நிதி உதவி எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ), (இ), (உ), and (எ) இது குறித்து அவை முன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, கொடைக்கானல் டவுன்ஷிப் வேலை திருப்திகரமாக இல்லை என்று அங்குள்ள மக்கள் கருது கிறார்கள். பொதுஜனங்களும், ஊழியர்களும், கட்சி வேறுபாடில்லாமல் அபிப்பிராயப்படுகிறார்கள். மீண்டும் அதை முனிசிபல் நகரமாக்கி தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : தலைவரவர்களே, இந்த நகரக் குழுவில் பொதுமக்களின் அங்கத்தினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து திருப்திகரமாக இயங்கவில்லை என்கிற குற்றச்சாட்டு எதுவும் வரவில்லை. குறைகளைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்புவார்களானால் என்னென்ன என்று பார்த்து நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மீண்டும் இதை நகராட்சியாக மாற்றுவது பற்றிய செயல்குறிப்பு எதுவும் தற்போதில்லை.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Sir, in view of the strain on the whole water-main, will the Government consider the question of requesting the township to put up bigger mains as early as possible ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : இருக்கிற நிதி நிலைக்கேற்ப தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

Panchayat elections

*160 *Q.*—**THIRU N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of panchayats in this State where elections have not yet been conducted ; and

(*b*) reasons therefor ?

பஞ்சாயத்து தேர்தல்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழகத்தில் இன்னும் எத்தனை பஞ்சாயத்துக்களுக்குத் தேர் தல்கள் நடைபெறவில்லை ?

(இ) அதற்குக் காரணம் என்ன ?

---

a Printed as Appendix III on pages 268–270.